www.tamilarangam.net

# நமது குரல்



அடுப்பங்கரையில்

சாம்பற் பூச்சிகளாம்

இனியுமா...?

நாங்கள்...?

ஆடி 1990 வெளியீடு 25.

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அனுதாபம்

என்னை
அவர்களுக்குப் பிடித்தது
அழகான
பெண் என்பதால்,
அநாமதேயக்குரலில்
படுக்கைக்கு
அழைக்க முடிந்தது
அதுவும்
அவள் என்பதால்,
என்னை
வாழ்க்கை
துணையாக்க
விளைந்தது
கருத்துரீதியான
வளர்ச்சி என்பதால்
நண்பா
சகலவற்றையும்
தீர்மானிக்கும்
அதிகாரம்
தற்போது
உன்னிடம்
உள்ளதால்
தீர்மானங்கள்
யாவும்
பக்க சார்பாகவே
அமைந்துவிடுகின்றன.
அதிகாரங்கள்
கைமாறும்
அடிமை விலங்குகளும்
அறுக்கவும்
உடைத்தெறியப்படும்
வேளை
வெகுதொலைவிலேயே.
நண்பா
உனது
இழப்புகளுக்காக
நான் முன்கூட்டியே
அனுதாபம்
தெரிவிக்கிறேன்.

— பாமினி —

0 0 0 0 0 0 0 0 0 0 0

அட்டைப்படம் — நன்றி : EINE HAND VOLL REIS

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாம் பேசுவோம்

எதற்காகப் பெண்கள் சந்திப்பு நடத்த வேண்டும்? எனது மனைவிக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துள்ளேன். அவவுக்கு தான் நினைத்தபடி நடப்பதற்குத் தேவையான சுதந்திரம் இருக்கிறது. அவ ஏன் இப்படியான சந்திப்புகளில் கலந்து கொள்ளவேண்டும்?.... கடந்த பெண்கள் சந்திப்புகளையடுத்து ஆண்கள் சிலர் தெரிவித்த கருத்துக்கள் இவை.

ஏதோ வீட்டில் நாளாந்தம் அடி உதை வாங்கித் துன்பப்படும் பெண்கள் தங்கள் குறைகளைச் சொல்லியழக் கூடுகின்ற கூட்டமே இது என்ற பார்வையையே இவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் கருத்துக்கள் தெரியப்படுத்தின.

உண்மையில் எவ்வாறு சமுதாயத்தால் நாம் அடக்கப்பட்டு வாழ்கின்றோம் என்பது பெண்களுக்குத் தெரிவதில்லையோ, அதே போல் ஆண்களுக்கும் அது தெரியவில்லை.

இந்த ஒடுக்கு முறையை நாம் உணர முடியாதபடி, பண்பாடு, கலாச்சாரம் பாரம்பரியக் கோட்பாடுகள் என்ற முகத்திரைகள் மூலம் சமுதாயம் அதைக் காப்பாற்றி வருகிறது.

எப்படி பெண்ணினத்தைத் தட்டியெழுப்பி உலகெங்குமுள்ள பெண்களின் அவல நிலையை உணர்த்த முன்வருகின்றோமோ, அதே போல் பெண்களுக்கு மட்டும் ஏன் இந்த அநியாயம், அடக்குமுறை என்ற கேள்வியை ஆணினமும் புரிந்து கொள்ளும் வகையில் நாம் முன்வைக்கவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களுக்கு என்று ஒரு தனியான சந்திப்பு அவசியமா? என்று ஆண்கள் முகஞ்சுளிக்கும் வேளையில் பல பெண்கள் உற்சாகத்துடன் இதில் கலந்து கொண்டதையும், நாம் தனியாக இல்லை என்ற உணர்வை எழுப்பியதையும் குறிப்பிட்டேயாகவேண்டும். இச்சந்திப்புகள் நிலைமைகளையும், பிரச்சனைகளையும் இனம் காட்டுவதுடன், தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் அளிக்கும் வகையில் அமைந்து வருவதும், குறிப்பிடத்தக்கதாகும்.

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே.
ஆக்கங்களுக்கு அவற்றின் ஆக்கதாரர்களே பொறுப்பு.

இன்று வவுனியாவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் கண்ணிவெடித் தாக்குதலுக்கு உள்ளானார்கள். இதில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயத்திற்குள்ளானார்கள். அரசதரப்பினர் தமிழ் விடுதலைப் புலிகள் மீது குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

இதே வேளையில், அரச படையினர் கிழக்கிலங்கையில் போர் விமானங்களின் உதவியுடன் போராளிகளை அவர்களின் மறைவிடங்களிலிருந்து வெளியே கொண்டுவரும் நோக்குடன் தமது நடவடிக்கைகளைத் தொடர்கின்றனர். கடைசியாக இடம்பெற்ற நடவடிக்கையின்போது 16 போராளிகள் கொல்லப்பட்டனர். கடற்படையினர் போராளிகள் கடல் மூலம் தப்பியோடாதவாறு கிழக்குக் கரையோரப் பகுதியை முற்றுகையிட்டுள்ளனர்.

பி.பி.சி. 8.07.90.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# இலங்கை : முழுமையான யுத்தத்தை நோக்கி இன்னுமொரு அடி.

இலங்கையின் நீண்ட-கால கெரில்லாப் போராட்டம் சென்ற வாரம் புதிய திருப்புமுனையை அடைந்தது. வடமாகாண நகரமாகிய யாழ்ப்பாணத்திலுள்ள 17ம் நூற்றாண்டு டச்சுக் கோட்டையை தமிழ்ப் போராளிகள் முற்றுகையிட்டுள்ளனர். அரசபடைகள் கெலிகொப்டர்கள், பொம்பர்கள் கொண்டு பதில் தாக்குதல்களை நடத்தினர். பாதுகாப்பற்ற கிராமங்களையும், கிராமத்தவர்களையும் அரச துருப்புக்கள் தாக்கியதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. குண்டு வீச்சுகளின்போது சில அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருப்பதை கொழும்பு அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆனால் பொது மக்கள்தான் விமானத் தாக்குதலுக்கு உள்ளானார்கள் என்பதை அரசு மறுத்தது.

இதே வேளையில் அரச படைகள் தமிழ்ப் போராளிகளுக்கெதிராக முற்று முழுதான தாக்குதலுக்கான ஆயத்தங்களைச் செய்கின்ற இதில் சுயவிருப்பத்தின் பேரில் கடமையாற்ற 12000 பேர்கள் முன்வந்திருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடபகுதி தற்போதும் போராளிகளின் கைவசம் உள்ளது. ஆனால் சென்ற கிழமை கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் அரசபடைகள் தமிழ்ப் போராளிகளின் கையை 'வெற்றிகரமாகப் பலவீனப் படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

அரசாங்கம் கிழக்கிலங்கையைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்குள் இரு தரப்பிலுமாக இறந்தோர் தொகை 1600க்கும் மேலாகியது.

கிழமை முடிவில் அரசாங்கம் தனது களையெடுப்பு வைபவத்தை மட்டக்களப்பில் நடத்தியபோது, பல போராளிகள் நகரத்தைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகளுக்குள் ஒளிந்து கொண்டதை அதிகாரிகள் ஒத்துக் கொண்டனர்.

ஆதாரம். நியூஸ்வீக். ஜூலை 9, 1990.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகக் கிண்ணம் - 1990.

இதுவரை நடைபெற்ற உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி பற்றிய பார்வை.

நடைபெற்ற போட்டிகள். 14. (1930 முதல் 1990 வரை)

வெற்றி பெற்ற நாடுகள்.

1. உருகுவே. இரண்டு முறை. (1930,1950).
2. இத்தாலி. மூன்று முறை. (1934,1938,1982).
3. ஜேர்மனி. மூன்று முறை. (1954, 1974,1990).
4. பிரேசில். மூன்று முறை. (1958,1962,1970).
5. இங்கிலாந்து. ஒரு முறை. (1966).
6. ஆர்ஜென்ரீனா. இரு முறை. (1978,1986).

இம் முறை இறுதி ஆட்டத்தில் கலந்து கொண்ட ஜேர்மனியும் ஆர்ஜென்ரீனாவும் இதுவரை 12 போட்டிகளில் மோதிக்கொண்டுள்ளன. அவற்றில் ஜேர்மனி 5 போட்டிகளிலும், ஆர்ஜென்ரீனா 5 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 2 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

உலகக் கிண்ணப் போட்டியில் முதன் முறையாக இரண்டு அடுத்தடுத்த இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட அணிகள் என்ற பெருமை இவ்விரு அணிகளையே சாரும்.

இம்முறை நடைபெற்ற இறுதிப் போட்டியை சுமார் 75,000 பேர் நேரிலும், சுமார் 3 மில்லியன் பேர் தொலைக்காட்சியிலும் கண்டு களித்ததாகக் கூறப்பட்டது. இரண்டு ஆர்ஜென்ரீனா வீரர்கள் வெளியே அனுப்பப்பட்டார்கள்.

100,000 டொச் மார்க் பெறுமதியான தங்கத்திலான பரிசை ஜேர்மனி தட்டிக்கொண்டது.

- கரன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒட்டுண்ணி

சத்தியன்-

ஊர் முழுக்க அல்லோல கல்லோலப்பட்டது.

கந்தசாமியரின் மகள் புவனு தற்கொலை செய்துவிட்டாளாம்.

குசினிக்குள் அடுப்பங்கரையில் தங்கச்சி செல்வியோடு
சாப்பாட்டுக்குச் சண்டை போட்டுக் கொண்டிருந்த எனக்கு
மனதில் ஒரு மாதிரி இருந்தது.

" தம்பி சுரேசு கந்தசாமி மாமாவின்ரை மகளெல்லே
அலரிக் காயை அரைச்சு தின்டு போட்டாளாம் "

அம்மா கையில் உறி உமலோடு வீட்டு வாசலில் நின்றாள்.

ஆடு "மே.... என்று கத்தியது.

" சுரேசு உன்னெல்லே ஆட்டுக்கு பூவரசங்குழை
வெட்டிப் போடச் சொன்னனான் ".

" ஓமெணையம்மா ஆடு பசியிலை கத்துது. குழை ஒடிச்சு போடச்
சொல்ல என்னோடை கொழுவிக்கொண்டு நிற்கிறார் " தங்கச்சி
அம்மாவுக்கு சுருதி பிடித்தாள்.

" ஓ .. இவ கொக்கச் சத்தகம் நான் கொழுவுறன் " என்று
தங்கச்சியின் கொண்டையில் எட்டிப்பிடித்தேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது என் கையில் அகப்படவில்லை.

" ஏனணையம்மா புவனம் செத்தவளாம் "

" ஏதோ காதலாம் கத்தரிக்காயாம் என்டு ஊரெல்லாம்

கதை அடிபடுகுது ".

" இந்தா பிள்ளை ! அந்த கறி உமலைப்பிடி ......

மீனைத் தண்ணியில நனைய விடம்மா.....

என்று சொல்லிக்கொண்டு சீலையைக் கழட்டி கதியாலில் கட்டியிருந்த

கொடியில் போட்டாள்.

" எனை தம்பியன் பெண்டில் எங்கன்ரை கந்தசாமியின்ரை

பெட்டையெல்லே செத்துப் போனளாம்......

செத்த வீட்டை போகலாமெண்டு வந்தனான்

வாறியே ? "

மாமி அன்னம் நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்தபடி குந்தில்

உட்கார்ந்தாள். அன்னம் மாமி ஒரு இராக் காகம். கோயில் மணி

எங்கையிருந்தாலும் மனிசியின்ரை குரல்தான் முதல் வரும்.

" ஒரே காண்டாவனமாக் கிடக்கு பிரவுவான்ரை வெய்யில்....

கெரெக கொஞ்சம் தண்ணி கொண்டு வாப்பு "

" இந்த மனிசி எப்பவுமே இப்படித்தான் என்னையொரு

ஊந்தாரியாவே நினைக்காது.

இன்னும் மனிசிக்கு நான் சின்னப் பிள்ளைதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சின்னச் சின்ன வேலையெண்டாலும் என்னைத்தான் செய்யச் சொல்லுவா என்று மனதுக்குள் நினைத்தவாறு சொம்புடன் தண்ணியைக் கொண்டுவந்து கொடுத்தேன். மனிசியோடு நான் வலு செல்லம். மாமியின் வாயைக் கிளறினேன்.

"இந்தப் பெட்டை ஏனும் மாமி செத்தவள்?"

"அவள் ராசம்மாவின்ரை இரண்டாவது பெடியனோடை இந்தப் பெட்டை காதலாம். அவனுக்கு இப்ப கலியாணம் செய்ய விருப்பமில்லையாம். அதிலை இவள் அலரியை அரைச்சுக் குடிச்சுப் போட்டாளாம்"

"ஏனனை மாமி முதல் விரும்பின பெடியனுக்கு பிறகு விருப்பமில்லாமல் போனது ?"

"ஓ .. மாமியும் மருமகனுமாச் சேர்ந்து காரணம் கண்டு பிடியுங்கோ"

அம்மா கொக்கத்தடியை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு முன் வேலியில் இருந்த முள்முருக்கு இலையை வெட்டியபடி சொன்னாள்.

"எடி பிள்ளை நீ எப்ப குழை ஒடிச்சு எப்ப செத்த வீட்டை வரப் போறும்" மாமி தொடர்ந்தாள்.

"கொஞ்சம் பொறன். ஒரே வெட்கை, தண்ணி கொஞ்சம் வாயிலை வச்சுப் போட்டுப் போகலாம்.....

நான் சந்தையால வரேக்கை செத்த வீட்டை ஒருக்கா எட்டிப்பாத்து விட்டுத்தான் வந்தனான். குமர்ப்பிள்ளை பிரேதமாக் கிடக்க வயித்தைப் பத்தி எரியுது" அம்மா குரல் தளதளக்கக் கூறினாள்.

அம்மாவின் முகத்தைப் பார்த்தேன். கண் கலங்கியிருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நல்ல மனிசிதான் நீ. நேரம் கழிச்சுப்போகு அவங்கடை முகத்திலை எப்படி மூறிக்கிறது. என்ரை அப்புவின் உருத்துக் காரர்கள்" என்றவாறு சொந்த பந்த உருத்து ஆராய்ச்சி நடந்தது.

எனக்கு இதுகளைக் கேட்க நல்ல விருப்பம். இவை இவையள் என்ரை சொந்தமெண்டா ஏதோ மனதில் ஒரு புது பலம்.




"அம்மா! நானும் செத்த வீட்டை வரட்டே"

"உனக்கு என்ன விசரேடா ? சந்திக்கு சந்தி இந்தியன் ஆமிக்காம்ப். எந்த நேரத்திலை பிடிப்பான், அடிப்பான் என்டு தெரியாமல் கிடக்கு" அம்மாவின் வார்த்தையில் சூடு ஏறியது.

"உன்னையெல்லோடா கொழும்பிலை நிற்கச் சொல்லுறனுங்கள். ஏன்ரா ஓடி வாறனி" மாமி செல்லமாகத் திட்டுகிறாள். அதனோடு உரிமையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொனிக்கிறது.

மாமிக்கு என்னைவிட இளமையா மகள் இருந்திருந்தா சில வேளை கொஞ்சம் மரியாதையாப் பேசியிருக்கும். எனக்கு என்னவோ மனிசி யின்ரை மகள்மாரை விட இந்தத் திட்டுக்கள் பிடிக்கும்.

நானும் சொல்லுக்கேட்பதில்லை. ஊரில், நாட்டில் பிரச்சனை என்று பாதுகாப்பாக இருக்குமென்று ஆரம்பத்திலேயே அப்பா என்னைக் கொழும்புக்குக் கட்டிக்கொண்டு போய்விட்டார். ஆனால் நானோ என்ன பிரச்சனை என்டாலும் மூன்று மாதத்திற்கு ஒருக்கா ஊருக்கு வந்து விடுவேன்.

எத்தனை சென்றி பொயின்ற். எத்தனை ஆமிக் காம்ப் எத்தனைதரம் பஸ்ஸில் இருந்து இறங்கி ஏறி.... செக்கிங் என்ட பேரிலே உலுப்பி எடுக்கப்பட்டு, கண்ணிவெடி வைச்சு குண்டும் குழியுமான ரோட்டில் கடலிலை வத்தை போனது மாதிரி ஆடி அசைந்து, குலுங்கி அடிவயிறு நோக விசருக்கு மேலே ஏதாவது வியாதி இருந்தா அதுவும் வரும்.... எனக்கு மட்டுமில்லாமல் எல்லா சனங்களுக்குமான இந்தக் கஷ்டங்களை அவர்களைப் போலவே நானும் தாங்கினேன்.

இவையெல்லாம் தாண்டி ஊருக்குள் வந்து இறங்கினால் நரை மண்ணும்,, பூவரசமரமும், கிணறும் துலாவும், உடன் மீனும் அம்மாவும் சகோதரங்களும்..

அதை எப்படிச் சொல்லுவது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாட்டுக்கன்று தாயின் முலைக்காம்பில் வாய்வைத்துச் சுவைக்கும்போது அதன் முகமலர்ச்சி என் கண்களிலும் தெரியும். மனம் அமைதியாகி .... மேகக் கூட்டங்களிடையே உலாவரும்.

அம்மாவும் மாமியும் செத்த வீட்டை போய்விட்டார்கள். நல்ல வடிவான பெட்டை. எனக்கும் ஏதோ முறையில மச்சாள்தான். கொஞ்சம் வடிவான பெட்டையெண்டால் அந்த ஆறு அடிக்கொடி தாண்டியும் முறை கண்டுபிடிப்பதில் நான் சூரன்.

ஒருக்கா இரண்டுதரம் திருகோணமலை போனபோது புவனம் வீட்டையும் போன ஞாபகம். அவள் அப்பாவுக்கு ரெயில்வேயில் வேலை.
அப்ப வடிவாக் கதைச்சு சாப்பாடு போட்டுத்தந்து கவனிச்ச ஞாபகம் .... தொந்தரவு படுத்தியது.
செத்த வீட்டை போக இரண்டாவது தங்கச்சி செல்லக்குஞ்சு வழி காட்டினாள்.
"அண்ணை உந்த சந்தியால போனா இந்தியன் ஆமிக்காம்ப்.. இருக்குது. அதை விட்டிட்டு புறத்து வழியாலை போ. உவர் கந்தையா வாத்தியாரின் கண்டியால பூந்து, கன்பிற்றை கட்டை வேலியைக் கடந்து சின்ன வயிரவர் கோயில் தாண்டி வாற ஒழுங்கையால போனா செத்த வீடு வரும்".
வரைபடம் ஒழுங்காகத்தான் தந்தாள். அவள் சொன்னபடியே கண்டியாலை பூந்து கட்டைவேலி பாய்ந்து பனம்மூரி சாரத்தைக் கிழிக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறுமார் கடல் தாண்டியமாதிரி செத்த வீட்டை போய்ச் சேர்ந்தேன்.

நிச்சயமாக இந்த பாதையெல்லாம் இந்தியன் ஆமிக்கு தெரிந்திருக்க

ஞாயம் இல்லை என்ற நினைப்பு தெம்பாக இருந்தது.

சனம் செத்த வீட்டில் குழுமியிருந்தது.

கூட்டம் கூட்டமாக அஞ்சாறு பெண்டுகள் சேர்ந்து

கட்டிப் பிடித்தவாறு ஒப்பாரி வைச்சுக் கொண்டு இருந்தது தெரிந்தது.

பெட்டையின் சிறியதாய் செல்லக்கண்டு வருகின்ற பெண்டுகளுடன் சேர்ந்து

அழுது கொண்டிருந்தாள். அப்படி அழாவிட்டா அது பெரிய பிரச்சனையாக

வருவது ஒன்றும் அதிசயமில்ல.

இல்லாவிட்டால் உறவுகள் இழுபறியாகும்.

செல்லக்கண்டுவின் ஒப்பாரி காதைக்கிழித்தது.

ஒப்பாரியின் அர்த்தங்கள் உள்ளுக்குள் ஏதோ செய்தது.

"என்ரை ராசாத்திக்கெல்லோ....

நான் கத்தரிக்காய் கறிகாய்ச்சி....

ஆசையோடு காத்திருந்தேன்.

நீ சொல்லாமல் கொள்ளாமல்.... .

போனியோ.......

"என்ரை ஆச்சி....

உன்ரை சின்னக் கலியாணம் காணுமை....

பெரிய கலியாணம் காணவச்சியே...."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீட்டு முற்றத்தைத் தாண்டி பிரேதம் வைத்திருந்த ஹோலின் யன்னல் பக்கம் போனேன். உள்ளே பார்வையை விட்டேன். பிரேதம் வைக்கப்பட்டு துணியால் மூடி முகம் மட்டும் தெரிந்தது. தலைமாட்டில் குத்து விளக்கு மங்கி மங்கி எரிந்து கொண்டிருந்தது. முகம் இறுகி ஏதோ மாதிரி இருந்தது.

பெட்டையின் தாய் கட்டிலுக்கு பக்கம் அரைமயக்கத்தில் கிடந்தாள்.

"அம்..மா அடி வயிற்றிலிருந்து பந்து போல ஏதோ என் நெஞ்சுக்குள் ஏறியது. மேற்கொண்டு என்னால் பார்க்க முடியவில்லை. கயிறு எரியும் மணம்வேறு மூக்கை அரித்தது.

செத்த வீட்டுக் காரியங்களை உறவுக்காரர்கள், உருத்துக்காரர்கள் ஓடியாடிச் செய்து கொண்டிருந்தார்கள்.

வீட்டுக்குப் பின்னாலுள்ள ஆட்டுக் கொட்டிலுக்குள்ளே கொஞ்ச பெண்டுகள் ரவுண்டாக இருந்தவாறு வெற்றிலை போட்டவர்களும், சுருட்டைச் சுற்றி இழுத்தவர்களும், தேத்தண்ணி குடித்தவர்களுமாய் பறைந்து கொண்டிருந்தார்கள்.

மெல்ல அவர்கள் கூட்டத்தை நோக்கி நடந்தேன். எல்லோருமே தெரிந்தவர்கள்தான். சுத்திச் சுத்தி வந்தா சுப்பற்றை கொல்லை என்ற சின்னம்மாமாராகவோ, பெரியம்மாமார்களாகவோ, அக்கம்மாமாராகவோ தான் இருப்பார்கள்.

நான் எப்பவுமே மாமிமார், ஆச்சிமார், மச்சாள்மார் ஆகியோரோடு பகிடி விடுவது வழக்கம். அவர்களும் அப்படித்தான்.

"டேய், சுரேக நீ எப்பவடா கொழும்பால வந்தனி," கோயில் மாமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விசாரிச்சார்.

"ஏன்டா இந்த நேரத்தில இஞ்சை வந்தனி. இராசகுமாளென்டா உந்தப் படுபாவியளுக்கு கண்ணிலை காட்டமுடியாமக் கிடக்கு"

"யாரது என்ரை பேரனே" முறை கொண்டாடினாள் மீனாட்சிக் கிழவி.

"ஓமனை" என்டவாறு அவர்கள் அருகிலேயே இருந்தேன்.

செத்த வீட்டைப் பற்றி அவரின் விமர்சனம் காரசாரமாக ஆரம்பித்து விட்டது.

"அவள் பெடியனிலைதான் பிழை. காதலிச்சுப்போட்டு பெட்டையைக் கைவிடுறதே"

"போடி விசரி உதுக்காக பெட்டை சாகிறதே"

"உப்படி எங் உலகத்தில எத்தனை நடக்குது. உங்கை உவள் குமாரசாமியின்ரை மகள் ஒருத்தனைக் கலியாணம் கட்டிப்போட்டு இன்னொருத் தனோடை வாழேல்லையே"

"அதுகளைப்பற்றிக் கதைக்காதை. அதுகளும் ஒரு ஆட்களெண்டு"

"என்னடி கதைக்கிறும் என்ரை அக்காவைப்பற்றி. உன்ரை தங்கச்சி கலியாணத்துக்கு முன்னம் குட்டி வாங்கினது மறந்துபோச்சோ?"

நிலைமை முற்றி சண்டை வந்துவிடும் என்று பயந்தேன். அவர்கள் இருவரும் கொடுக்கு இழுத்துக்கட்டத் தயார். மீனாட்சிக் கிழவிதான் பேசி நிற்பாட்டினாள்.

"ஏனடி அங்கை இஞ்சை போறியள். எல்லோரைப் பாருங்கோடி, நான்

www.tamilarangam.net

இரண்டு கலியாணம் செய்தவள். என்ரை முதல் புருசன் என்னை விட்டு விட்டு கொழும்புத்துறையிலை பொம்புளை வைச்சிருந்தான். அப்பு பாத்திட்டு என்ரை மச்சானை எனக்குக் கட்டித் தரேல்லையே"

"எங்கடை கிராமத்தில இதெல்லாம் சகஜம். எத்தனையோ பேர் இரண்டு மூன்று கலியாணம் செய்திருக்கினம். அதையாரும் இங்கே பிழையா பார்க்கேல்லை" பார்வதிப் பாட்டி சொன்னாள்.

"ஓமனை, அந்தக் காலத்திலை சின்ன வயசிலேயே பேசிப்போடுவினம். சில வேளை அவங்களையே நாங்கள் கலியாணம் செய்ய முடியாமல் போய்விடும். அதுக்காக சாகிறதே ?
மனசிலை எத்தனை கனவுகளைக் கட்டியிருப்பம்".

"தொப்புள் கொடியறுந்தவுடனேயே கண்டறியாத கலியாணப் பேச்சு ஒன்டு"

"ஓமடி மீனாட்சி சரியா சொன்னாய். பிள்ளையளுக்கும் மனசு ஒன்டு கிடக்குது அதிலையும் ஆசை, காதல்....வருமென்டு அப்பன் ஆத்தைமாருக்கு தெரியுமே"

தங்களை மறந்து எல்லோரும் திட்டிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் யாரைத் திட்டினம் என்டு அவையளுக்கே தெரியவில்லை.

" உண்மையா என்ன பிரச்சனை நடந்தது. ஏன் பொடியன் கலியாணத்துக்கு மாட்டன் என்டு சொன்னவன்" பூங்காவனப்பாட்டி கேட்டாள் மூக்கு சளியைச் சிந்தியபடி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


"பெடியனுக்கும் பெட்டைக்கும் சின்ன வயசிலையே கலியாணம் பேசி இருந்ததாம். அதுகளும் அதாலை மனசிலை ஆசைகளை வளர்த்து வளர்த்திருக்குதுகள். பெடியனுக்கு இரண்டு தமக்கைமார் தனமும் ரதியும். மூத்த பெட்டைக்கு கலியாணம் செல்லராமற்றை பெடியனுக்குப் பேசினதாம். செல்லராமற்றை குடும்பம் மூன்று லட்சம் சீதனம் கேட்ட தாம். பெடியன்ரை தாய் தகப்பனிட்டை அவ்வளவு காசு இல்லை. பெடியனும் வீடு ஈடு வைச்சு,ஏஜென்சி காசு கட்டி ஏமாந்து கடன் உடன்பட்டுதானே சவுதிக்குப் போனவன். அவன் போன கடனே அடியேல்லையாம். இந்த நேரத்திலை மூன்று லட்சத்திற்கு எங்கை போறது. பெடியன்ரை தாய் தகப்பன் இஞ்சை புவனத்தின்ரை தகப்பனிட்டை சீதனமா காசு கேட்டிருக்கினம். இதுகளி ட்டை ஒன்டுமில்லை. இருந்ததை உருட்டிப் பிரட்டித்தானே மூத்த பெட் டைக்குக் கொடுத்தது!"

நான் ஒழுங்காகக் கதை கேட்டுக்கொண்டிருந்தேன். பாக்கியம் அக்கா தேத்தண்ணி கொண்டுவந்து கொடுத்தாள்.

"பிறகு என்ன நடந்தது"

"பெடியனுக்குத் தகப்பன் தாய் நிலமையை விளக்கிக் கடிதம் போட்டி ருக்கினம். தனத்திற்கு வயது போகுது. சீதனக்காசு புவனம் வீட்டுக் காரர் தரமாட்டினம். உனக்கு வேறை எங்காவது கலியாணம் பேசப் போறம்."

பெடியனும் சவுதியிலை இருந்து மறுப்பா எழுதியிருக்கு. பிறகு ஒன்டும் சொல்ல முடியாமை சரி... என்டு எழுதிப் போட்டுதாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அதைக் கேள்விப்பட்ட இவள் விசம் சாப்பிட்டிட்டாள் ?

எனக்கு இப்ப கதை ஒழுங்காக விளங்கியது. தலை இடித்தது. மெல்ல அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன். வடிவா யோசிச்சன். பெடியனிலை முழுக்கப் பிழை சொல்லேலாது. அக்காவுக்கு கலியாணம் செய்ய வேணும் என்டதற்காக உப்படி செய்து போட்டான்.

அவன் செய்தது சரியென்டு சொல்லமுடியாவிட்டாலும் முழு குற்றத்தை அவன் தலையிலை போடமுடியாது.

பெட்டை பாவம்.

அவள் தற்கொலை செய்தது பிழை! ஆனால் செய்து போட்டாள். எத்தனை ஆசை கனவுகளை நம்பிக்கையோட கண்டிருப்பாள்.

ஒவ்வொரு பக்கமும் நின்டு பார்த்தா ... யாரிலை பிழையென்டு அடிச்சுச் சொல்ல ஏலாமை கிடக்குது.

சீதனச் சனியனை இல்லாமற் செய்துவிட்டா ?. இப்படியான சாவுவீடுகள். பெண்ணைப் பெற்றவர்களின் கஷ்டங்கள் இல்லாமப் போகும். பொம்பிளையள் தங்கடை காலிலை நிற்பானவையள்.

ஆனால் சீதனத்தை 'எப்படி இல்லாமல் செய்யிறது. எனக்கு விளங்கயேயில்லை.

என்ரை சிநேகிதன் சொன்னவன், எந்தப் பிரச்சனையென்னாலும் அதன் மூல வேரைக் கண்டுபிடி, அதை எப்படி ஒழிக்கிறது என்டு யோசி.

எனக்கு யோசிக்கவே தலை இடித்தது.

" என்ன கொடுமை கலியாணம் ஏதோ புனிதம் அது இது என்டெல்லாம் சொல்லுறாங்கள். எனக்கு அப்படித் தெரியேயில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பச்சைப் புல்லுக்கு வியாபாரமாக் கிடக்குது.

வன்னி மாட்டையும், வடகம்பரை ஆட்டையும்

சோடி சேர்த்து கதையாக் கிடக்கு.

கண்டியனி, குச்சொழுங்கை, கட்டைவேலியெல்லாம் தாண்டி வீட்டுக்கு

வந்தேன்.

என்ரை தங்கச்சிமார் மூன்றுபேரும் வரவேற்றார்கள். செத்த பெட்டையின்

முகத்தில் ஒவ்வொருவராம் வைத்துப் பார்த்தேன்.

ஓ......

அம்மா வீட்டுக்கு வந்தா.

சவம் எடுத்தாச்சாம். ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறதாம்

கடலுக்கு.

0 0 0 0 0 0 0 0 0 0

கதை, கவிதை, கட்டுரைகளை உங்களிடமிருந்தும் நமதுகுரல் வரவேற்கிறது. புனைபெயரில் எழுதுவோர் தமது சொந்தப் பெயர், முகவரியைத் தெரிவிக்க வேண்டும்.

பெயர், முகவரி தெரிவிக்கப்படாத ஆக்கங்களோ, விமர்சனங்களோ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட மாட்டாது.

www.tamilarangam.net



# சாம்பர் பூச்சிகள்.

நீங்கள்
எங்களைப் பாருங்கள்.
சேலையையும், ரவிக்கையையுமல்ல
உணர்வுகளை.
முகத்தையும், மார்பையுமல்ல,
மனக் குமுறல்களை.

எங்கள் தட்டில் குளிர்காய,
நீங்களடுக்கிய
விறகுக்கட்டைகளைச் சுமந்தபடி
அடுப்பங்கரையில்
சாம்பர் பூச்சிகளாய்
இனியுமா...?
நாங்கள்...?

உங்கள்
அர்த்தமற்ற அதட்டல்களையும்
வறட்டுக் கட்டளைகளையும்
நிறைவேற்றும்
மனித ஜடமாக வாழாமல்
மனிதர்களாக
நாங்கள்.

- கல்யாணி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளின் ஆசிரியர், ஆக்கதாரர், வாசகர் கலந்துகொள்ளும் இலக்கியச் சந்திப்பு 9.06.90. அன்று எசன் நகரில் நடைபெற்றது.

காலை 9.00 மணியளவில் இந்த எட்டாவது இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சி ஆரம்பமானது. வரவேற்புரை, சுய அறிமுகம், தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து விமர்சனங்களும், ஆசிரியர், ஆக்கதாரர் பதில் இடம் பெற்றது.

அடுத்த நிகழ்ச்சியாக " உலகியல் ஒப்புநோக்கில் எமது சமூக சமகால வளர்ச்சி " என்ற தலைப்பின் கீழ் கட்டுரைகள் திரு.கு.பரராசசிங்கம், அ.அலெக்ஸ் ஆகியோரால் வாசிக்கப் பட்டன. இதையொட்டிய கலந்துரையாடலும் இடம் பெற்றது.

மதிய போசனத்தையடுத்து, "மலையக மக்களும் நாங்களும்" என்ற தலைப்பில் திரு.ஆ.வேலாயுதத்தினால் கட்டுரை வாசிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.


அடுத்த 9ஆவது இலக்கியச் சந்திப்புக் குழு தெரிவு செய்யப் பட்டது. ஆலன் நகரில் சந்திப்பை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. '8 ஆவது இலக்கியச் சந்திப்பின் செலவினங்களும் வரவும் வாசிக்கப்பட்டது.

இதையடுத்து "கவிதைகள் மீதான கன்ஸேர்ட்டம்" நிகழ்ச்சி இடம் பெற்றது. இதில் பங்குபற்றவிருந்த திரு.கலைச்செல்வன் வருகை தராததால் திரு.முருகதாசன் மட்டுமே கலந்துகொண்டார். திரு.சுசீந்திரனும் கவிதைகள் மீதான தமது விமர்சனத்தை முன் வைத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்மாவும் நானும்.



இந்த உலகில்
வந்து உதிக்கும்
ஓர் ஜீவன்.

என்
பிறப்பு அறிந்து
பல முகங்கள்
சுழிக்கக் கொள்ளும்.

ஆரம்பப் பள்ளி
அடுப்படியில் ஆரம்பம்
அம்மாவே ஆசிரியையாம்...

ஆச்சியும்
ஆச்சியின் ஆச்சியும்
உதாரணங்களாகி

'அடக்கமான பெண்'
என்ற
பெருமை தேடிக்கொள்ள
அவர் உழைப்பில்
பெரும் பகுதி எனக்காக...

உண்மைகளை
எப்படி அவளால்
உணர முடியும்

இந்தப்
பரந்த பூமியை
அவள்
பார்த்ததேயில்லை.

ஆனால்
என்னால் முடியாது...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இளமையின்
இனிமைகளை
யாருக்காகவோ
விட்டுக் கொடுத்துவிட்டு
வேதனைத் தீயில்
வெந்து மடிய
என்னால் முடியாது...

அண்ணாவும் தம்பியும்
சுற்றித் திரியும்
சுதந்திரம் பார்த்து
என்னால்
சும்மாயிருக்க முடியாது.

என்
சுதந்திரக் காற்றை
சூறையாடி
சிறு உலகில்
சிறை வைத்துப் பூட்டும்
இந்த
துவனி அமைப்பு முறைக்குள்
என்னால்
அடங்கி வாழ முடியாது.

0 0 0 0 0 0 0

.நா. நிருபா.

www.tamilarangam.net





# சித்திரா=பெண்

பார்த்திபன்

## 11.

தவமணி தனது மடியில் சித்திராவின் தலையைக் கிடத்தி பேன் பொறுக்கிக் கொண்டிருந்தாள். இருபத்தைந்திற்கு மேல் எடுக்கவிட்டால்தான் அவளை விளையாட விடுவதாக இருவரும் ஒப்பந்தித்திருந்தார்கள். சித்திரா எச்சரிக்கையாக எண்ணிக் கொண்டிருந்தாள். "ஒம்போது .... பத்து..."

சபேசன் எப்போதோ தாச்சிக்குப் போய்விட்டான். அவனுக்கு இந்தத் தலைச் சிரமங்கள் எதுவும் இல்லை. சந்தோசமாயிருக்கலாம்.

மாதவி சோதினைக்குச் சேர்ந்து படிக்க தோழியிடம்போயிருந்தாள். "படிக்கப் போறன் என்டிட்டு அங்கபோய் விளையாடிறயில்லை. இருட்ட முதல் வந்திடு. ஒழுங்கையால வராமல் ரோட்டால வா" இந்த எச்சரிக்கைகளும் சபேசனுக்கு இல்லை. அவன்பாட்டுக்கு சாவகாசமாய் புழுதியுடன் வருவான்.

சிவலிங்கம் கேற்றடியில் நின்று மாணிக்கவாசகத்துடன் கதைத்துக்கொண்டிருந்தார். இருவரும் ஒரே பேப்பரில், ஒரே விசயத்தில் ஆர்வம். பகல் முழுதும் வேலையிலும், பின்னர் சும்மா இருப்பதிலும் கூட ஒற்றுமை. ஈரானில் உஷா என்ன மாதிரி, ரஸ்யாவில் பனிமழை, இங்கே ஏன் நெல்லு விலை கூடினது... என்பதைப் பற்றியெல்லாம் யாருக்கு அதிகம் தெரியும் என்று காட்ட முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எப்போது சந்தித்தாலும் இதே முயற்சிதான். பெரும்பாலும் 'ரோ'வாயிருக்கும்.

அம்மம்மா விறாந்தையிலிருந்து வியாசர் விருந்தின் இருபத்திச் சொச்சப் பதிப்பைப் படித்துக் கொண்டிருந்தாள். எத்தனை பதிப்புகள் வந்தாலும் அவளுக்கு அலுக்கப் போவதில்லை. இந்நேரம் பீமன் கதையைத் தூக்கியிருப்பான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"விளையாடப் போறன்" நேரம் போய்க்கொண்டிருப்பதை விட்டு சித்திரா சிணுங்கினள்.

"தலையை ஆட்டாமலிரு. எடுக்கவிடாட்டி விளையாட விட மாட்டன். ஒரே சிக்கும் பேனும். வெக்கமில்லையே"

"அப்ப தலைமயிரை வெட்டி விடுங்கோ"

"பேன் எடுக்கவிடாட்டி மொட்டைதான் அடிக்கிறது"

சித்திரா ஒன்றும் சொல்லாமல் மடியிலிருந்த தலையைக் கொஞ்சம் அசைத்து வாசலைப் பார்த்தாள். அப்பா மாணிக்கவாசகம் மாமாவுடன் கையை ஆட்டி ஆட்டிக் கதைப்பது தெரிந்தது. அதற்கும் அப் பால் பாதையில் யாரோ போனார்கள். தெருவில் இருட்டப் போகிறது.

"இருவது. இனி விடுங்கோவன். நாளைக்கும் எடுக்கலாந்தானே" சித்திரா மறுபடி சிணுங்க, தனக்கும் கையுளைந்ததில் தவமணி அவளை போக அனுமதித்து, ரத்த நகத்துடன் எழுந்து உள்ளே போனள். சமைய லறை அவளை வருக வருகவென வரவேற்றது.

சித்திரா துள்ளலுடன் வாசலுக்கு வந்து அப்பாவுக்குக் கை காட்டிவிட்டு கௌரி வீட்டுக்கு வந்தாள். அங்கே ஏற்கெனவே எட்டுக் கோட்டை ஆரம்பித்திருந்தார்கள். "கெதியா வா"

நல்ல வட்டமாக உரஞ்சி உருவாக்கப்பட்ட சிலேட்டுத்சல்லி- டை கட்டங்களுக்குள் எறிந்து, அதற்கேற்ப கெந்தினர்கள். தனது முறை வ ருமட்டும் சித்திரா சுற்றிலும் பிராக்குப் பார்த்தாள்.

முன் வாசற் கதவருகில் கதிரை போட்டிருந்த கௌரியின் அப்பா காதருகே சின்ன றேடியோ வைத்து கர்புர்றென்று ஏதோ கே ட்டுக் கொண்டிருந்தார்.

கிணற்றடியில் கௌரியின் அம்மா பலகைக் கட்டை போட் டுக் குந்தியிருந்து, கரி போட்டு சமையல் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். தோங்கியிருக்கும் தண்ணீர் சட்டையை நனைத்துவிடாமலிரு க்க, கொஞ்சம் உயர்த்தியிருந்தாள்.

மாலை தன்பாட்டுக்கு தற்கொலை செய்து கொண்டிருந்தது.

சித்திரா மூன்று முறை தோற்று, நான்காம் முறை, கண்களை மூடி அண்ணாந்தபடி றைட்டோ, றைட்டோ சொல்லிக் கொண்டிருக்கும்போ து, கௌரியின் அம்மா வீட்டுக்குள் வெளிச்சம் வைத்துவிட்டு " இருண்டு போச்சு இனிக் காணும் விளையாட்டு. நாளைக்கு விளையாடலாம்"என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவித்தாள்.

பூரணமாக விளையாட்டை அனுபவிக்காத அதிருப்தியில் எல்லோரும் தங்கள் தங்கள் அம்மாக்களை வைதுகொண்டு கலைந்தார்கள்.

சித்திரா வீட்டுக்கு வந்தபோது "கெதியாய் கால், முகம், கை கழுவிக்கொண்டு போய் படி" என்ற அப்பா, மாணிக்கவாசகம் மாமாவுடன் முன்பு விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார் "அப்ப நீங்கள் சொல்லுறியள் அமெரிக்கா விட்ட றொக்கற்தான் கூடவென்டு"

சித்திரா எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு அசிரத்தையாகப் புத்தகத்தைக்கொண்டு வந்து விரித்தாள். பாலாவும், நிசாரும் பந்தை ஓடிப் பிடித்தார்கள். ஆடு மே மே என்று கத்தியது.

சபேசன் தாமதமாக வந்து கொஞ்சம் கணக்கு செய்தான். அடிக்கடி மூத்திரம் பெய்யவென்று வெளியில் போனான்.

அம்மா இரவு இடியப்பம் அவித்துப் பரிமாறினாள். சபேசன், மாதவி, சித்திரா படுக்கப் போனபோது, அப்பா றேடியோவில் செய்தி கேட்க, அம்மா மாதவியின் வெள்ளை யூனிபோமை அயர்ன் பண்ணினாள்.

நாட்கள் போகப் போக சித்திராவுக்குப் பல விசயங்கள் புரியாமலே வந்துகொண்டிருந்தன.

சபேசன் அப்பாவின் வயது முதிர்ந்த சைக்கிளில் பாருக்கு கீழால் காலைவிட்டுக் உளாவி, அதிவீரமாக ஓடிப் பழகிய போது தானும் சைக்கிள் பழக விரும்புவதாக மாதவி தெரிவித்தாள்.

"வாயை மூடிக்கொண்டிரு. சைக்கிள் பழகப் போறாவாம்!" அம்மா வெடித்தாள்.

"சைக்கிளை பெடியள்தான் ஓடுறது. பொம்பிளையள் ஓடக் கூடாது. பொம்பிளையளின்ரை உடம்பு சைக்கிள் ஓட வாகில்லை. காலைக் கிளப்பிக்கொண்டு ஓட நாளைக்கு நாலு சனம் நாலைக் கதைக்கும்" அம்மம்மா வியாசர் விருந்தை மூடிவைத்துவிட்டு மாதவிக்கு ஆறுதல் சொன்னாள். விட்டால் பொம்பிளையள் சைக்கிள் ஓடவில்லை என்பதற்குச் சரித்திர உதாரணங்களை எடுத்துக் கொட்டிவிடுவாள்.

இதன் பிறகு சைக்கிள் ஓடப் போவதாக மாதவி சொல்லாவிட்டாலும், அக்காவுக்கும் அண்ணாவைப் போலத்தானே காலும், கையும் இருக்கு என்று சித்திரா நினைத்துக் கொண்டாலும் சீரியஸாக அதை எடுத்துக்கொள்ளவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஒவ்வொரு வகுப்பேற்றத்தின்போதும் சித்திரா நிறைய மாற்றங்களைச் சந்தித்தாள். உடுப்பிலிருந்து விளையாட்டுவரை. உடம்பு வேறு விதவிதமான பரிமாணங்களைக் காட்டத் தொடங்கியது.

இப்போது அவளுக்கு இரட்டைப் பின்னல் தோன்றிவிட்டது. அம்மாவில் முழுக்க முழுக்கத் தங்கியிருந்தது மாறி சுயமாக சின்ன அழகு வேலைகள் செய்யத் தொடங்கிவிட்டாள். நெற்றியின் மத்தியில் கறுப்புப் பொட்டு நிரந்தரமாகியது. ஆரம்பத்தில் இடப்பக்கக் கன்னத்தில் நெருப்புக் குச்சியால் சாந்தைத் தொட்டு, குறியாக வைக்கப்பட்டு வந்த செயற்கை மச்சத் திட்டம் பிறகு கைவிடப்பட்டுவிட்டது.

மூன்றாம் வகுப்பிலிருந்து ஆண்களையும், பெண்களையும் வேறாகப் பிரித்துவிட்டார்கள். அநேகமாய் இது பலருக்குப் புதினமாய் இருந்தாலும் எல்லோரையும் சேர்த்து இருக்க வைத்தாலென்ன என்று தோன்றவில்லை.

ஒருநாள் பாடசாலையில் சித்திராவுக்கு ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. பிஸ்கற் சாப்பிடும் இடைவேளையின்போது சாந்தன் கொஞ்சப் படங்கள் கொண்டு வந்து சித்திராவுக்குக் கொடுத்தான்.

"என் இது?"

"உங்களுக்குத்தான். நல்ல படங்களே?"

சித்திரா ஒவ்வொன்றாகப் பார்த்தாள். சுமார் அமைதியாகவோ சரஸ்வதி கையில் வீணையை வேறு பாரமாக வைத்துக்கொண்டு, வெள்ளைத் தாமரை பிய்யாமல் அநாயசமாக உட்கார்ந்திருந்தாள். சின்னப் பூனைக்குட்டி ஒன்று முன் கால்களை உயர்த்தி சோம்பல் முறித்தது. என்னத்திலோ இருந்து எல்லாத்தையும் கிழித்தெடுத்து சேகரித்திருக்கிறான்.

"இவ்வளவும் எனக்கே?"

"ஓம் நாளைக்கும் கொண்டுவந்து தாறன்"

என்ன இருந்தாப்போல சாந்தன் அக்கறையாய் படங்கள் கொண்டுவந்து தாறான் என்ற ஆச்சரியம் எழுந்தாலும் உடனே அழிந்து சித்திரா சந்தோசத்துடன் அவற்றைத் தனது புத்தகத்திற்குள் வைத்தாள்.

வீட்டுக்குக் கொண்டு வந்த படங்களை மாதவிக்குக் காட்டியபோது, விசயத்தைக் கேட்டுவிட்டு அவள் வித்தியாசமாய் சிரித்தாள். "நாளையிலயிருந்து இன்னும் கொஞ்சம் கிரைலாப் போடு உப்பிடிக் கனக்கப் படங்கள் சேக்கலாம்" என்று அக்கா சொன்னது சித்திராவுக்குப் புரியவில்லை.

இதன் பிறகும் சாந்தன் அடிக்கடி சித்திராவுக்குப் படங்கள் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்தான். (தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்கள் அமைப்பாக வேண்டுமா?

-சியாமளா-

அண்மைக் காலத்தில் பெண்கள் அமைப்பாக வேண்டும் என்ற குரல் உரத்து ஒலிப்பதை அவதானிக்க முடிகிறது. அடிமைப்பட்ட இனத்தின் விடுதலை உதிரிகளால் வென்றெடுக்கப்படும் என்பது சாத்தியமாகாத ஒன்று. இந்நிலையில் பெண்கள் அமைப்பாவது தவிர்க்க முடியாத தேவையாகும். பெண்களின் பிரச்சனைகளை பெண்களால் இலகுவாக விளங்கிக் கொள்ளமுடிவதுடன் உதவிகளையும் உற்சாகத்தையும் வழங்கமுடியும்.

பாஷைத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் வீடுகளில் அடைந்து கிடப்பதும், அடைக்கப்பட்டிருப்பதும், வீடியோ படங்களின் தாக்கத்தால் கனவுலகில் மிதந்து கொண்டு தன்னைச் சூழ நிகழ்கின்றவற்றிலிருந்து அறியாமலே அன்னியப்படுவதுடன் குழந்தை, புருசன், சினிமா, அலங்காரம் என்ற வட்டத்தினுள் வளைய வருபதுமாக காலத்தைக் கழிக்கின்றனர். பெண்கள் சந்தித்தால் சினிமா, அலங்காரம்,குடும்பத்தைப் பற்றியதாகவே கதைகள் அமைந்துவிடுகின்றன.

மிகக்குறைவு. இதற்கு பலர் பலவிதத்தில் அர்த்தங்கள் கற்பித்தாலும் உண்மையில் இவர்கள் இந்த வட்டத்தைத் தவிர வேறெந்த விடயம் பற்றியும் அறிந்திருக்கவில்லையென்பதும், அறிய வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை அல்லது கிடைப்பது மறுக்கப்பட்டு அல்லது கிடைத்தும் சரியான முறையில் பயன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுத்தாமையும் காரணமாகும். இந்நிலைமை மாறவேண்டுமாயின் சூழவுள்ளவை பற்றியும், பெண்களால் பலவற்றைச் சாதிக்க முடியும், என்ற நம்பிக்கையூட்டலும், காலத்தைப் பயனுள்ள வழியில் செலவிடவும், பங்களிப்புகள் தனிய குடும்பத்திற்காக மட்டுமன்றி சமூகத்திற்கும் வழங்க முடியும் என்கிற கருத்துக்களை வலியுறுத்த, தெரிந்துகொண்ட விடயங்களை பகிர்ந்து கொள்ள தொடர்ச்சியான சந்திப்புகள் அவசியம்.

தற்போது வாழும் சூழலிலுள்ள பெண்களும் எம்மைப் போல் அடக்கப்பட்டவர்கள்தான். திடீரென இங்கு இந்நிலைமை தோன்றவில்லை. கடந்த சந்ததியின் கடுமையான உழைப்பும் உறுதியான போராட்டமுமே இன்றுள்ள ஓரளவு சுதந்திர நிலைமையை இன்றைய சந்ததிக்கு வழங்கியது. பெண்கள் தனித்து பல முயற்சிகளில் ஈடுபடுதல், சுயமாக முடிவெடுத்தல் சட்டங்களினுதவியுடன் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தல், தனிநபராக இயலாத நிலையில், அமைப்புகளின் உதவியுடன் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை அணுகுதலையும் அவதானிக்க முடிகிறது.

பல பெண்களுக்கு தாம் வெளியே வரவேண்டும், பயனுள்ள முயற்சிகளிலீடுபடவேண்டும் என்ற ஆர்வம் இருந்தும் ஆதரவின்மையாலும் தனித்து செயல்பட முடியாத தன்மையாலும் அமைதியாகவே உள்ளனர். ஓர் நல்ல வாய்ப்பையும், தனித்து பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாத நிலைமையில் ஆலோசனைகள், பிரச்சனைகள் பற்றிக் கலந்துரையாடல், ஆதரவு பெறுதல் போன்றவற்றையும், எமது சமூகத்தில் பெண் என்ற ஒரே காரணத்திற்காக பாதிக்கப்படுகின்றவர்கள் இங்கும் பலருண்டு. இத்தகைய பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பலமாகவும், ஆதரவு வழங்கலையும், அமைப்பாதல் மூலம் வழங்கலாம்.

பெண்விடுதலைப் போராட்டம் பெண்களாலேயே முன்னெடுக்கப்பட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டியதொன்று. பெண்களுக்கு பிரச்சனைகளை புரிய வைப்பதற்கான (எவ்வாறு உரிமை மறுக்கப்பட்டு, அடிமையாகவுள்ளனர் என்பது) வழிகளாக தனியே புத்தகங்களை நம்பியிருப்பது முழுமையானதல்ல. புத்தகங்களில் வருபவற்றைப் பலரும் புரிந்து கொள்வதில்லை. பெண்களுக்கு புத்தகங்களை வாசிப்பதற்கான நேரமும் மிகக் குறைவு. புத்தகங்களை எடுத்தவுடன் அவற்றை வாசிப்பதில் ஆர்வம் காட்டும் குழந்தைகளும், புத்தகத்தைப் போட்டுவிட்டு சாப்பாடு போட அழைக்கும் ஆண்களும், புத்தகம் வாசிப்பதை விட்டுவிட்டு வீட்டு வேலைகளைக் கவனிக்கப் பணிப்போருமே பெரும்பான்மை. இந்நிலையில் வாசிப்பது என்பது இலகுவல்ல. கலந்துரையாடல், கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்தல், விவாதங்களை ஏற்படுத்துதல் போன்றவற்றை தனி நபர்கள் ஒழுங்கு செய்வது சிரமமானதே. இவற்றைக் கூட்டாக செயல்படும்போது பெறக்கூடிய வாய்ப்புண்டு.

தனியே தையல், சமையல், பாரம்பரிய பெண்களின் தொழில்கள் தவிர்ந்த ஏனையவற்றைப்பற்றி அறிய, பலருடன் சந்தித்துக் கதைத்தல் உதவுகிறது. பெண்விடுதலைப் போராட்டம் தனித்து இலங்கைப் பெண்களுடையதல்ல. ஏனைய சமூகத்திலும் பெண்விடுதலைப் போராட்ட அமைப்பு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

சில பெண்விடுதலை அமைப்புகளின் தவறான போக்குகளாலும், பெண்விடுதலை குறித்து சிலருடைய தவறான விளக்கங்களாலும், சொல்வது ஒன்றாகவும் செய்வது வேறொன்றாகவும் இருந்தல் போன்றவற்றாலும் கடந்தகால கசப்பான, அமைப்பாகிப் பிரிந்து, செயலிழந்த அநுபவங்களாலும் அமைப்பாதலை கஷ்டத்துடன் பார்ப்போருமே எம்மில் பலர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நாங்கள் அனைவரும் மாறுபட்ட, வேறுபட்ட சூழலில் வளர்ந்ததுடன் வேறுபட்ட கருத்துக்களையும் கொண்டவர்களாக உள்ள நிலைமையில் அமைப்பு உருவாக்கப்படும்போது பிரிவது நிகழ்வு. இது கூட வளர்ச்சியே. பிரச்சனை பொதுவானதாக இருந்தாலும் இதன் தாக்கமும் இது பற்றிச் சிந்திக்கும் தன்மையும் சார்ந்துள்ள நிலைமைகளுக்கு ஏற்ப வேறுபடும். ஆணாதிக்கத்தாலும் பாரபட்சமான கலாச்சார மூலமும் அடக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்ட பெண் இனத்தின் விடுதலையானது அனைத்து சமூக மட்டங்களிலும் உள்ள பெண்களுக்கு பிரச்சனைகளைப் புரியவைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி பெண்விடுதலைக்கான பணியில் பெண்களே ஈடுபடுவதன் மூலமே பூரண விடுதலையை பெறமுடியும். சமூகமாற்றம் ஏற்படவேண்டுமாயின் பெண்களின் பங்களிப்பின்றி நிகழ முடியாத ஒன்றே. இந்நிகழ்வுகளுக்கான வழியில் பெண்கள் அமைப்பு உதவமுடியும்.

0 0 0 0 0 0 0 0 0

டோட்முண்ட் ஏழிசை வித்தியாலயத்தின் 1வது ஆண்டு இசைவிழா 18.08.90. சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இடம்.

AULA SCHULE

MUNSTER STR 138,
DORTMUND 1.

வித்தியாலய மாணவ மாணவிகளின் கூட்டு இசை நிகழ்ச்சிகளும், வாத்திய இசை நிகழ்ச்சிகளும், இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வி.எஸ். செல்வராசா,

சங்கீத ஆசிரியர். டோட்முண்ட்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆளாகினேன்.

மண் விளையாடிக் கொண்டிருந்த வேளையது
அப்பா அவரை
மங்கலாகத்தான் நினைப்பிருக்கிறது
கம்பீரமாக களையாக இருப்பார்
எல்லாவற்றையுமே கவனிப்பார்.
அப்போதெல்லாம்
அம்மாவும் கலகலப்பாக இருந்தாள்.

ஒரு நாள்
காலம் அப்பாவை
விழுங்கி விட்டதாக
எல்லாருமாய் கதறினார்கள்.
தேடினேன் காணவில்லை.
அவருடைய எல்லாமே
வீட்டில் இருந்தன.
தொலைந்தது அப்பாதான்.



அம்மாவிடம் கேட்டேன்
மௌனமானாள்...
இரண்டு வேலையும் அவளே செய்தாள்,
எல்லா வேளையும்...
சமுதாய சங்கடங்களைத் தாங்கினாள்,
அம்மா போராடினாள்...
நான் ஆளாகினேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டம், புரட்சி, விடுதலை...
எல்லாமே விளங்கும் வேளையில்
ஆனாலும் போராட்டம்....?
அம்மாவின் போராட்டம்
அதி உயர்வானது.

அவள் சாயல் இருக்காதா என்ன?
நானும் ஆளாகி... ஏதோ ஒன்றில்
ஒரு போராளி ஆவேன்.

.கோசல்யா சொர்ணலிங்கம்.
முல்லைகம்.

## திருமணம்

இடமாற்றலுடன்
இலவச சேவையை
இறுதிவரை
வழங்க
இலட்சங்களுடன்
எழுதப்படும்
அடிமை உறுதி.

- பாமினி.

0000000000000000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் சந்திப்பு

மேற்கு ஜேர்மனியில் புகலிடம் கோரி வாழும் தமிழ் பேசும் பெண்கள் கலந்து கொண்ட பெண்கள் சந்திப்பு நிகழ்ச்சி கேர்ணே நகரில், மூன்ரும் உலகநாடுகள் தகவல் நிலைய மண்டபத்தில் 12.05.90 அன்று நடைபெற்றது.

10.00 மணியளவில் ஆரம்பமாகிய இந்த இரண்டாவது பெண்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் 18 பெண்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை புவனு நடாத்திச்சென்றார்.

சுய அறிமுகங்களையடுத்து, "பெண்களும் எங்கள் சமூகமும்" என்ற பெண்ணின் குரல் 8 இல் வெளியான கட்டுரை வாசிக்கப்பட்டு, கலந்துரையாடப்பட்டது. விஜயாவினுல் உணர்ச்சிபூர்வமாக வாசிக்கப்பட்ட இக்கட்டுரை இதுதான் பிரச்சனை என்று உண்மையை எடுத்துக்காட்டுகிறது எனப்பலரும் கருத்துத்தெரிவித்தனர்.

தொடர்ந்து, ஆயுதப்போராட்டமும் கூட பெண்களுக்கு எந்தவித விடுதலையையும் ஏற்படுத்தித்தரும் என்று நம்பமுடியாதென." சகோதரியொருவர் குறிப்பிட்டார்.

பெண் பொருளாதார நோக்கத்திற்காக ஆணைச்சார்ந்து நிற்க வேண்டியுள்ளது. அவள் பொருளாதார சுதந்திரத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பெண்ணின் பாதுகாப்பும் ஒரு முக்கிய பிரச்சனையே என்றகருத்துக்கள் தெரிவிக்கப்பட்டபோது பெண்ணிற்குப்பாதுகாப்பு திரு என்பது திருமணமல்ல, வேலை செய்யுமிடங்களில் மட்டுமல்ல கணவனுல் கூட, அவள் பாதிக்கப்படுகிருள் என மல்லிகா தெரிவித்தார்.

பெண்கள் தனித்து வாழுவது பாதுகாப்பு என்று கருதமுடியாது. தனித்துவாழும் பெண்கள் தமக்கு ஏற்படுத்தப்படும் அவப்பெயரைப் பொருட்படுத்தாமல்

வாழும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனோபக்குவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது இன்னொரு சகோதரியின் கருத்தாக இருந்தது. இதன்போது, பலாத்காரத்தின் நோக்கத்தை நாம் கண்டுகொள்ள வேண்டும், பலாத்காரப்படுத்தப்பட்ட பெண்ணும் தற்கொலை பற்றிய எண்ணத்தை மாற்ற வேண்டும் என்ற கருத்தும் அங்கு வெளிப்பட்டது.

சமூக அமைப்பு பாதிப்பாக இருந்தாலும் உளரீதியாக, விடுதலை வேண்டும் என்ற உணர்வு பெண்களிடம் குறைவாகவுள்ளது" அது வளரவேண்டும் என்று உமா கூறினார்.

ஒவ்வொரு பெண்களும் தாங்களே தான் அதற்கான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். சமூகத்தில் தற்போது அதற்கான மாற்றீடு இல்லாதிருக்கலாம், ஆனால் பிரச்சனைகளை விளங்கிக்கொண்டவர்கள் இதற்கான வழிவகைகளை முன் வைக்கலாம் என்று இன்னொரு சகோதரி குறிப்பிட்டார்..

பெரும்பாலான கணவன்மார் மனைவியரை இத்தகைய கலந்துரையாடல்களுக்கு அனுமதிக்காததற்குக்காரணம், பிரச்சனைகளை இனங்கண்டு விடுவார்களே என்ற பயந்தான் எனத்தெரிவிக்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில், திருமணத்தின் பின் ஒருபெண் தொடர்ந்தும் தனது தனித்தன்மையைப் பேணவேண்டுமா? அல்லது எதற்கும் அவர் என்று அவருக்குள்ளேயே தன்னை அடக்கிக் கொள்ள வேண்டுமா? என்ற கேள்விக்குக், திருமணம் வாழ்க்கையில் ஒரு சிறிய திருப்பம்; கடமைகள் ஒருவேளை இதனால் கூடலாம், ஆனால் பெண்கள் திறமைகளை வெளிக்காட்ட வேண்டும், வேலைக்குச் செல்லவேண்டும், தனித்தன்மையைப்பேணவேண்டும் என்பது பதிலாக விருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திறமை முடக்கப்படுவது உண்மை; பொருளாதார சுதந்திரம் உள்ள பெண்களுக்கு ஓரளவு சுதந்திரம் இருக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டபோது, உத்தியோகம் பார்க்கும் பெண்களும் சுதந்திரமாக இல்லை என அது மறுதலிக்கப்பட்டது.

திருமணத்தின் பின் குழந்தையைப் பார்ப்பதற்காக வேலையை விடுவது யார்? என்ற கேள்வி எழும் போது பெரும்பாலும் பெண்ணே வேலையை விட வேண்டி நேரிடுகிறது. குழந்தை பார்க்க ஆணும் முடியும், ஆனால் முடியாது என்ற கருத்துப் பிழை என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது.

அடுத்து, பெண்கள் ஒன்று கூடுவது ஏன் அவசியம்? என்ற தலைப்பின் கீழ் கலந்துரையாடல் இடம் பெற்றது. பெண்களுக்கு சமூகத்தில் பாதிப்பு அதிகம் . எமக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை நாமே விழுங்கிக்கொள்கிறோம். உடைக்கப்படவேண்டிய அடக்குமுறைகளை இனங்கண்டுகொள்ள நாம் ஒன்று கூட வேண்டும், பலத்தைப்பெருக்க வேண்டும். ஒன்றுகூடுவதன் மூலம் நாம் மனம் விட்டுப்பேசிக்கொள்ள முடிகிறது. பெண்களுக்குரிய பிரச்சனைகளை மனம் விட்டுப்பேசிக் கொள்ள முடிகிறது. இதற்கான தீர்வுகளையும் காணலாம். தாய்நாட்டில் என்றால் உறவினர் நண்பர்களுடன் கதைத்துப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வோம். சேர்ந்து கதைப்பது உற்சாகத்துடன் தெம்பைக் கொடுக்கிறது, என்ற கருத்துக்கள் கூறப்பட்டன.

எமது சந்திப்புக்கள் ஆண்களுக்கு எதிரானவை என்ற தப்பபிப்பிராயம் நீக்கப்படவேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தலைப்பின்கீழ் பெண்களுக்கு அமைப்பு அவசியம் என்ற கருத்தை கட்டுரையுடன் 'ஜன்வரி வாசித்தார். இதைத்தொடர்ந்து அமைப்பு தேவையா? இல்லையா? என்று கருத்துப்பரிமாற்றங்கள் இடம் பெற்றன.

தற்போதைய சூழலில் அமைப்பு அவசியமில்லை. தொடர்ந்து சந்திப்புகளை நடத்திய பின்னரே அதைப் பற்றி முடிவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

மதிய இடைவேளையில் போது உணவருந்திக்கொண்டே ஒருவரோடொருவர் கருத்துப்பரிமாற்றம் செய்து கொண்டனர். அப்போது நாமெல்லோரும் ஒரு இலக்கை நோக்கிச் செல்கிறோம் என்ற உணர்வு அங்கு வெளிப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இடைவேளையின் பின் பலஸ்தீன நாட்டுப்பெண்களின் பிரச்சனைகளை விளக்கும் வீடியோ ஒன்று காண்பிக்கப்பட்டது. கவிதாபாரதியின் கவிதையொன்றும் வாசிக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில், எதிர்கால ஆலோசனைகளாக,

1. தொடர்ச்சியாக கருத்தரங்குகளை நடத்தல்.
2. இலங்கையிலுள்ள பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிகளை வழங்குதல்.
3. மலர் ஒன்றை வெளியிடல்.

என்பன தெரிவிக்கப்பட்டன.

தொடர்ந்து சந்திப்புக்களை நடத்துவதற்கான ஒருவருடத்துக்கான குழுவொன்று தெரிவு செய்யப்பட்டு அடுத்த சந்திப்பை வுப்பெற்றல் நகரத்தில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

0.0000000000000000000000000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜப்பானியத் திருமணத் தரகர்களின் பொறியில் இலங்கைப் பெண்கள் விழுகிறார்கள்.

பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த வயதான ஜப்பானிய விவசாயிகளுக்கான மணப்பெண்களாக இளம் இலங்கைப்பெண்கள் தம்நாட்டை விட்டுச் செல்வது தொடர்கிறது. மின்னும் விளக்குகள் கொண்ட நகர்ப்புறங்களையும் டிஸ்கோ, ஷொப்பிங் சென்ரர்களையும், இளம் கணவன் ஒருவன் பற்றிய கனவுகளையும் சுமந்தே இவர்கள் செல்கிறார்கள்.

இலங்கை, ஜப்பானிய தொடர்பு சாதனங்கள், பொருளாதார நிபுணர் புரொபசர் நகாமுரா மூலமும் மேற்கொண்ட அதிகார பூர்வமான விசாரணைகள் மூலம் பல விபரங்கள் வெளிவந்துள்ளன.

இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பான் ஆக்கிரமிப்பின் போது ஜப்பானிய ஆடவர் தைவான், கொ கொரியா போன்ற நாடுகளிலிருந்து மனைவியரை எடுப்பது சகஜம். ஆனால் தற்போது இலங்கை, பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த பெண்கள் இதில் கவர்ந்திழுக்கப்படுகிறார்கள்.

மணப்பெண்களை இறக்குமதி செய்யும் நடைமுறை 1985 இல் பிலிப்பைன்ஸ் பெண்களில் ஆரம்பித்தது, அடுத்த ஜூலை 1986இல் வந்து சேர்ந்தது. தொடர்ச்சியாக தாய்லாந்து, பர்மா, இலங்கை, தாய்வான் தென்கொரியா போன்ற நாடுகளிலிருந்தும் பெண்கள் வரத்தொடங்கினார்கள்.

தொடர்ந்து மணப்பெண்களை ஏற்றுமதி செய்வதில் முக்கிய இடத்தைப்பிடிப்பது இலங்கை, பிலிப்பைன்ஸ் நாடுகளே

www.tamilarangam.net


ஜனவரி யூன் 87க்கிடையில், மணிலாவில் உள்ள ஜப்பானிய தூதரகத்தில் திருமணத் தகுதியுடையவர்களுக்கான பத்திரத்திற்காக 743 பேர் விண்ணப்பித்தனர்', வருடாந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 1500 பேர்வரை இருப்பதாக நகாமுராவின் கணிப்புக்கள் கூறுகின்றன.

கிட்டத்தக்க 16 -18 வயதான இளம்பெண்களே இலங்கையிலிருந்து மணப்பெண்களாகச் செல்கிறார்கள். அதுவும் 40 -50 வயதுடைய கணவன்மாருக்காக. இந்த ஆடவரும் இளமையான, ஆரோக்கியமான, அழகிய பெண்களையே தெரிவு செய்கின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் 20 இளம் பெண்கள் கொண்டுவரப்பட்டு, ஏஜன்சிமாரால் அடையாள எண்களும் கொடுக்கப்பட்டனர். ஏனெனில் ஜப்பானியர்களுக்குப் பெயர்களை உச்சரிப்பது கஷ்டமாக இருந்த காரணத்தால்.

இந்தப் பெண்கள் மணக்கவிருக்கும் ஆடவரை மறுப்பதற்குச் சாத்தியமில்லை. அப்படி மறுத்தால் தங்கள் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். முகவர்கள் அவர்களுடைய பாஸ்போட், போன்றவற்றை வைத்துக்கொண்டு பணம் எதுவும் கொடுப்பதில்லை. அவர்களது விசாவும் (உல்லாசப் பிரயாணிகளுக்கானது) மூன்று மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

இப்படி விசா பெறுவதற்கும், பணத்தாசை பிடித்த கம்பனி ஒன்று வழிவகை செய்துள்ளது. TOSHIN திருமண ஏஜன்சி இலங்கையில் சிறிய எலக்ரோனிக் கம்பனியொன்றை ஆரம்பித்துள்ளது. அதில் வேலைசெய்யும் இலங்கைப் பெண்கள் பயிற்சிக்காக ஜப்பான் வருவது என்ற போர்வையே அது.

இத்திருமணக் கம்பனித் தலைவர் இலங்கைப் பெண்களைப் பலவித துறைகளில் பயிற்றுவது பற்றிப் பெருமைப்படுவதாக பேராசிரியர் நகாமுரா குறிப்பிட்டுள்ளார். ஜப்பானிலுள்ள பின் தங்கிய கிராம அதிகாரிகளுக்கும், திருமண வியாபாரக் கம்பனிகளுக்கும்' சொன்னார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டில் பிணைப்பு உள்ளது என்பதும் இந்த ஆராய்ச்சியாளரின் நம்பிக்கையாகும். உதாரணத்திற்கு, TOHOKU மாவட்டத்திலுள்ள AOKI கிராமத்தில் சோஉதல் கமிட்டித்தலைவரும் இத்தனை பேரும் இலங்கைக்கு இது பற்றி விசாரணை நடத்துவதற்காக சென்றவர்கள், இந்த TOSHIN திருமண ஏஜென்சியின் உல்லாசப்பயணத்தில் இணைந்து கொண்டார்களென என்கிறார்.

1988 இல் 18 வயதான இளம்பெண் 5000 ரூபா பெறுமதியான (US $ 148) நகையைத் திருடியதான குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றுக்குக் கொண்டு வரப்பட்டார். 69 வயதான ஜப்பானியர் இவர் மீது புகார் கொடுத்திருந்தார். அந்தப்பெண் அவரை மணமுடித்து ஆண்மையற்றவர் என்ற காரணத்தினால் ஒரே இரவில் அவரை விட்டுப் பிரிந்தவர் என்பது விசாரணையின் போது தெரிய வந்தது.

ஜப்பானிய தரகர் ஒருவரால் திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டதென்றும், 50,000ரூபா தாயாரிடம் கொடுக்கப் பட்டதென்றும் பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். மணமகள் பணத்தைத் திருப்பிக் கொடுக்காதிருக்கவே களவுக்கதையைச் சோடித்துள்ளார்.

கொழும்புப் பொலிசார் ஜப்பான் மொழி பேசும் இளம் பெண்களால் நடத்தப்பட்டு வந்த இப்படியான அலுவலக மொன்றினை டிரேக் பண்ணினர். ஆனால் இப்போதும் திருமணங்களும், ஜப்பானை நோக்கிய புறப்படுதலும் நடந்து கொண்டேயிருக்கின்றன. சட்டரீதியான எவ்வித தடையும் இதற்கெதிராக இல்லை. பெண்ணைப் பொருளாதாரப்பிரயோசனமுள்ள பொருளாகப் பாவிக்கும் இந்த ஆட்சேபிக்கத்தக்க செயலுக்கு தற்போது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஜப்பானிலுள்ள இலங்கையர் அசோசியேஷன் இந்த மணப்பெண்களுக்கான உதவிகளைச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கைத் தூதரகத்தில் 5 பெண்கள் அகதிகளாக வந்துள்ளார்கள்.

தங்களுக்குத் தெரியாத இப்படி மிகவும் பின் தங்கிய பண்ணைகளுக்குப் போக வேண்டியிருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கொடுமையாக நடத்தப்பட்டதையும், நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியிருந்ததையும் பணமற்றிருந்ததையும் கூடச் சொல்லுகிறார்கள். தம்முடன் கதைக்கவேண்டாம் என்று தமது ஜப்பானிய மைத்துனிகள் சொன்னதையும் சொல்லுகிறார்கள். வேறு ஜப்பானியர்களோ அவர்களுக்குப் பழக்கமில்லை.

அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து விடுபட்ட மிகப் பின்தங்கிய பிரதேசங்கள், ஆணாதிக்கம் கொண்ட சமுதாயம், பெண்கள் புருஷனுடன் வயலிலும் இல்லிலும் வீட்டிலும் வேலை செய்யவேண்டியிருப்பதையும் நகாமுரா சொல்கிறார். AOHI கிராமத்தில் பெண்களின் பிறப்பு விகிதம், இறப்புவிகிதத்திலும் பார்க்கக்கூடவாக இருந்தும், ஆண்கள் விகிதம் பெண்களின் விகிதத்திலும் பார்க்கக்கூடுதலாகவுள்ளது. ஏனெனில் வாழ்க்கை டல்லாக இருப்பதால் பெண்கள் கிராமத்தை விட்டு நீங்கிச் செல்லுகின்றார்கள். ஜப்பானிய ஏஜென்சிகள் பல கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்கி இத் திருமணங்களை நடத்தி வருகிறது.

இதில் கண்டிக்கப்படவேண்டியது, பெண்ணின் மனித உரிமைகள் மதிப்பிழக்கப்படல் ஆகும். நகாமுரா கேட்கிறார், மனித உரிமைகளையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்கப் போதுமான கவனம் எடுக்கப்படுகின்றதா?

சமூக வாழ்வில் பாரபட்சம் காட்டல், வேலைவாய்ப்பு குடியுரிமையும் விவாகரத்தும், கல்வி இவற்றிற்கான பாதுகாப்பு?

இது பற்றிய விசாரணைக்காக டாக்டர். நீலன் திருச்செல்வம் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. சமுதாயம் இந்தப் பிரச்சனையை மனித உரிமைக் கோணத்தில் கவனத்தில் கொண்டுள்ளதுடன், இலங்கை ஜப்பானிய நாடுகளுக்கு பிரதிநிதிப்படுத்துதல் என்கிறார் டாக்டர். நீலன் திருச்செல்வம்.

தமிழில். டி.கே.

நன்றி: 'Women News' Vol.Vi No.4. Oct-Dec 1989.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதம்.

நாம் சிறிது பேசுவோம் உண்மையாகவும் தெளிவாகவும் இருக்கிறது. கடந்த இதழில் வெளியான கவிதைகள் எமது தோழர்கள் மத்தியில் சிறப்பானதாகக் கருதப்பட்டது. வன்புறுத்தலை எதிர்ப்போம் யதார்த்தப்படைப்பு. சுகவி.

பிரான்ஸ்.

வெளியீடு 22ல் வெளியான இலக்கியச் சந்திப்பு விமர்சனம் படித்தேன். அதில் பெண்களை வர்ணிப்பது, கனவலைத்.தெய்வமெனத் துதிப்பது பெண்களை இழிவு படுத்தும் என்ற பொருள்பட வசு சசி ஒருவரால் எழுதப்பட்ட கட்டுரையொன்றில் குறிப்பிட்டப்பட்டிருந்ததாக எழுதியிருந்ததைப் படித்தேன்.

கதைகளிலும், கவிதைகளிலும் வர்ணிப்புக்கள் பெண்களை இழிவு படுத்தும் நோக்குடன் எழுதப்பட்டவையல்ல. மேலும் பெண் சுதந்திரத்தை நான் ஆதரிப்பவன். இதை எனது பல கதைகளிலும் எழுதியுள்ளேன். பெண்ணடிமையை முற்று முழுதாக கதைகளிலும் புகுத்தியுள்ளேன். பெண்ணடிமையை முற்று முழுதாக வெறுக்கும் என்னை, பெண்களை இழிவு படுத்துவோர் வரிசையில் குறிப்பிட்டது ஆதரவு கொடுக்க வந்த கரங்களை கத்தி கொண்டு வெட்ட வருவதையொத்தது.

— காசி—

கடந்த ஏப்ரல் இதழில் நிருபாவின் கவிதை தரமாக இருந்தது. அவரது மற்றைய படைப்புகளில் அனுபவ முதிர்ச்சி குறைவு. கலியாணியின் கவிதைதான் மனதில் நினைத்தவற்றை அப்படியே சொற்களாக விதைத்தது மாதிரி இருந்தது. கவிதைக்கும் கலைப்படைப்புகளுக்கும் சிறிது சோடனை தேவை.

வன்புறுத்தலை எதிர்ப்போம் போன்ற பேட்டிக் கட்டுரைகள் நிறைய வரவேண்டும். முரி சிறுகதை நடையில் கோர்வை இல்லை. சொல்ல வந்ததை உருவ அமைப்புக் குறையாமல் சொல்ல வேண்டும்.

ச. தில்லைநடேசன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அனைத்தையுமே பொதுவாக......

வளைவின் பக்கமே வெட்டும்
வாச்சி போல்
வாய்ப்பால் வீரம் பேசிடும்
வீரரை
தணலாம் தகிக்கும் காய்ச்சிய
இரும்பென
வேகும் உள்ளங்கள் விளக்கம்
கேட்கும்
அவலாற் சுழலும் மக்களின்
முன்னே
பூச்சி புழுவென பொசுங்கும்
அராஜகம்
மேட்டு நிலத்தை வாட்டிச்
சமன் செய்து
நாற்றை நட்டுப் பயிர் செய்யும்
உழவரும்
பால் பேதமற்ற
பல் தொழிலாளரும்
பகுத்தறிவாளரும்
பல்வகைப் பட்டோரும்
கருத்தால் ஒன்றி கருதியதை
எய்த
வகுப்பார் வாய்க்கால்
வழியும் அந்நீரில் வளரும்
பயிர்கள்
உயரும் கல்வி
விரியும் தொழில் வளங்கள்
விழியில் நீர் அழியும்
விடிவெள்ளி வரும் ஒளிக்கு
கூறு கட்டியமாம்
அடிமட்டம் பெறும் ஒளியில்
புரட்சி தோன்றி
அது அளி(ழி)க்கும்
அனைத்தையுமே பொதுவாக.

— சிவப்பன் —

www.tamilarangam.net

# நமது குரல்



இச் சஞ்சிகை கேர்ன பெண்கள் வட்டம் அமைப்பின் சார்பில் மற்றும் உலக நாடுகள் தகவல் நிலையத்தினரின் உதவியுடன் மூன்று மாதங்களுக்கொரு முறை இலவசமாக வெளியிடப்படுகின்றது.

சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 1.00 மார்க் பெறுமதியான முத்திரைகளை அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு.

FRAUEN KREIS,
INFORMATION ZENTRUM DRITTE WELT,
OVERWEG STR 31,
4690 HERNE 1.

TELEFON: 02323/496970-74.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்